தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 78 | 4 Pages | 17.10.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 78 | 4 பக்கங்கள் | 17.10.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானஞ்செய் வாரின் தலை**

**விளக்கம்:**
ஒருவன் தன் மனதோடு பொருந்த உண்மை பேசுவானானால் அவன் தவத்தேடு தானமும் ஒருங்கே செய்வாரை விடச் சிறந்தவன்.

## கனமழையால் வெள்ளத்தில் மூழ்கியது பெங்களூரு பள்ளிகளுக்கு விடுமுறை



பெங்களூரு, அக். 17

தமிழ்நாட்டில் இன்று வடகிழக்கு பருவமழை தொடங்கியது. வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதால் வடதமிழகத்தின் பலவேறு பகுதிகளில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது.

கொட்டும் கனமழையால் சென்னையின் பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்துள்ளது.

இந்நிலையில், பெங்களூரு நகரில் இன்று பெய்த கனமழையால் சாலைகள் முழுக்க வெள்ளக்காடாகின. இதனால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதனையடுத்து பெங்களூருவிற்கு வானிலை மையம் ஆரஞ்சு அலர்ட் விடுத்துள்ளதால் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரில் உள்ள நிறுவனங்கள் தங்களது தொழிலாளர்களை வீட்டில் இருந்து பணிபுரிய அனுமதிக்க வேண்டும் என்று கர்நாடக அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

## ரூ.20,000 அட்வான்ஸ் கொடுத்து வாங்கிய டிவிஎஸ்.. ரூ.60,000 செலவழித்து கொண்டாடிய நபர்




மத்தியபிரதேசம், அக். 17

மத்தியபிரதேச மாநிலத்தில் டீக்கடைக்காரர் ஒருவர் ரூ.20,000 முன்பணம் செலுத்தி டிவிஎஸ் (TVS XL) பைக் வாங்கியதை ரூ.60,000 பணம் செலவழித்து கொண்டாடிய நிகழ்வு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முராரி லால் என்பவர் சிவபுரி மாவட்டத்தில் டீக்கடை நடத்தி வருகிறார். அவர் ரூ.20,000 முன்பணம் செலுத்தி டிவிஎஸ் பைக் வாங்கியுள்ளார். பைக் வாங்கும் முன்பு டிஜே இசையுடன் வீட்டிலிருந்து நடனமாடிய படியே பைக் ஷோரூமிற்கு பைக்கை வாங்க சென்றுள்ளார்.

அங்கு பைக்கை முன்பணம் கொடுத்து வாங்கிய பின்பு, ஜேசிபியை வாடகைக்கு எடுத்து பைக்கை தூக்கி கொண்டு ஊர்வலமாக எடுத்து சென்று கொண்டாடியுள்ளார்.

தனது குழந்தைகளை மகிழ்ச்சியடையச செய்வதற்காக இவ்வாறு செய்ததாக முராரி லால் இதற்கு விளக்கம் அளித்துள்ளார்.

முராரி லால் இவ்வாறு செய்வது ஒன்றும் இது முதல் முறையல்ல. 3 ஆண்டுகளுக்கு முன்பு தனது மகளுக்கு 12,500 கடன் வாங்கி மொபைல் போன் வாங்கி கொடுத்துள்ளார். பின்னர் மொபைல் போன் வாங்கியதை கொண்டாட ரூ.25,000 செலவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரே நாளில் ஐந்து விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்: கனடாவில் தரையிறங்கிய ஏர் இந்தியா

ஜெய்ப்பூர், அக். 17

பல விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட நிலையில், ஐந்து விமானங்கள் அவசரமாக தரையிறக்கப்பட்டன. சோதனைக் குப்பின் அவை அனைத்தும் போலி மிரட்டல் எனத் தெரியவந்தது.

டெல்லியில் இருந்து அமெரிக்காவின் சிகாகோ நகரத்திற்கு சென்று ஏர் இந்தியா விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதனால் இந்த விமானம் கனடாவில் தரையிறக்கப்பட்டது.

ராஜஸ்தானில் உள்ள ஜெய்ப்பூரில் இருந்து பெங்களூருவுக்கு சென்ற ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ், தமாம் (சவுதி அரேபியா) லக்னோ இண்டிகோ விமானம், தர்பங்கா மும்பை ஸ்பைஸ்ஜெட், சிலிகுரி பெங்களூரு ஆகாசா ஏர் ஆகிய விமானங்களுக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

இந்த வெடிகுண்டு மிரட்டல்கள் பல்வேறு விமான நிலையங்களில் பாதுகாப்பு அமைப்புகளால் பயங்கரவாத தடுப்பு பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. இறுதியில் வெடிகுண்டு மிரட்டல் புரளி எனத் தெரியவந்தது.

ஜெய்ப்பூர் பெங்களூரு விமானம் அயோத்தி வழியாக செல்லும் விமானம் ஆகும். இந்த விமானம் அயோத்தியில் தரையிறக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. ஸ்பைஸ்ஜெட், ஆகாசா ஏர் விமானங்கள் தரையிறக்கப்பட்டன.

விமானங்கள் தரையிறக்கப்பட்டதை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என விமான நிறுவனங்கள் தெரிவித்துள்ளது. டெல்லியில் இருந்து சிகாகோ சென்ற ஏர் இந்தியா விமானம் கனடாவிற்கு திருப்பி விடப்பட்டு அங்கு பாதுகாப்பு சோதனைகள் செய்யப்பட்டன.

இதேபோன்று நேற்று மும்பையில் இருந்து புறப்பட்ட மூன்று சர்வதேச விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. அவைகளும் புரளி எனத் தெரியவந்தது.

# மழை பாதிப்புகளை தி.மு.க. நிர்வாகிகள் கண்காணிக்க வேண்டும்: முதலமைச்சர்

சென்னை, அக். 17

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வரும் நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள 'War Room'ஐ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். அப்போது, மழை பாதிப்புகளை தி.மு.க. நிர்வாகிகள் கண்காணிக்க வேண்டும் எனவும், பொதுமக்களுக்கு உதவிடுமாறும் அறிவுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் தெரிவிக்கையில்,



"திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள 'War Room'ஐப் பார்வையிட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பகுதி வட்டச் செயலாளர்கள், கவுன்சிலர்கள் ஆகியோரைத் தொடர்பு கொண்டு, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை முகாம்களுக்கு அழைத்துச் செல்வதோடு, அவர்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளைச் செய்துகொடுத்து, நிவாரணப் பணிகளில் அரசு இயந்திரத்துக்குத் துணை நிற்குமாறு கேட்டுக் கொண்டேன்.

இரவு முழுதும் விழிப்புடன் பணியாற்றி, கோரிக்கைகளை ஒருங்கிணைத்து, பொதுமக்களுக்கு உதவிடுமாறு கழக நிர்வாகிகளை அறிவுறுத்தியுள்ளேன். அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள WarRoom எண்: 08069446900"

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## திருப்பூர் மாவட்ட தெற்கு தொகுதி, ஸ்ரீ சக்தி தியேட்டர் அருகில் கடுமையான மழையால் வெள்ளம் ஏற்பட்டதால் சாலைகள் சேதம்: பொதுமக்கள் பாதிப்பு

திருப்பூர், அக். 17

திருப்பூர் தெற்கு தொகுதி, ஸ்ரீசக்தி தியேட்டர் அருகில் கடுமையான மழையால் வெள்ளம் ஏற்பட்டதால் சாலைகள் சேதமடைந்தன.

இந்நிலையில், அருகிலுள்ள பள்ளத்தில் ஒருவர் இருசக்கர வாகனத்துடன் விழுந்தார். தகவல் அறிந்த உடனே, சம்பவ இடத்துக்கு திருப்பூர் தெற்கு சட்டப்பேரவை உறுப்பினர் க. செல்வராஜ், திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் மற்றும் பல முக்கியத் தலைவர்கள் சென்று, விழுந்தவரை மீட்டு



உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மழைக்கால வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலையை சீரமைப்பதற்கான பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதில் திரு. நாகராசன், பா. சூர்யா, ஆட்டோ தங்கராஜ், பி.ஆர். செந்தில்குமார் உள்ளிட்ட பல முக்கிய நிர்வாகிகள் பங்கேற்று மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த சம்பவம் 16102024 புதன்கிழமை காலை 10:30 மணியளவில் நடைபெற்றது.

## சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அரிமண்டபம் இராஜாக்கள் குடியிருப்பு முளைப்பாரி உற்சவ விழா

மானாமதுரை:அக் 17

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகில் உள்ள அரிமண்டபம் இராஜாக்கள் குடியிருப்பு கிராமத்தில் வெகு விமர்சையாக முளைப்பாரி விழா கொண்டாடப்பட்டது. மானாமதுரை வட்டம் மேலப்பசலை பஞ்சாயத்திற்கு உட்பட்ட அரிமண்டபம் இராஜாக்கள் குடியிருப்பு சுந்தரவல்லி அய்யனார் கோவிலில் முளைப்பாரி உற்சவ விழா கிராமத்தில் ஆண்டுதோறும் மக்களின் குறைகள் தீரவும் விவசாயம் செழிக்கவும் மழை



வேண்டி ஏழு நாட்களுக்கு முன்பு செவ்வாய் முளைப்பாரி காப்பு கட்டி விரதம் இருந்து முளைப்பாரி ஓடுகளில் நவதானியங்களை விதைத்து கோயில் முன்பாக வைத்து ஏழு நாட்கள் கும்மி பாட்டு ஒயிலாட்டம் என கொண்டாடி மகிழ்கிழ்ந்து வந்ததனர், இதனைத் தொடர்ந்து கிராம பொதுமக்கள் ஏழு நாளும் விரதம் இருந்து செவ்வாய் இரவு தெய்வத்திற்கு உணவுகளும் பரிமாறி சுந்தரவல்லி அய்யனார் கோவிலில் பெண்கள் அனைவரும் கோவிலுக்கு மூன்று முதல் ஏழு வரை ஒன்பது சட்டி வரை சட்டி சோறு எடுத்து சுந்தரவல்லி அய்யனார் கோயில் முன்பு படையல் வைத்து வணங்கி வந்தனர். புதன்கிழமை அன்று முளைப்பாரி ஓடுகளை சிறியவர் முதல் பெரியவரை பெண்கள் அனைவரும் தலையில் முளைப்பாரி ஓடுகளை தண்ணியில் அமுக்கி சூரிய பகவானை கும்பிட்டு நேர்த்திக்கடனை செலுத்தி கிராம பொதுமக்கள் சிறப்பு பூஜை செய்து வழிபட்டனர்...

## சின்னசெவலை மக்களுக்கு விமோசனம் கிடைக்குமா?



விழுப்புரம் , அக். 1

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் வட்டம் சின்னசெவலை ஊராட்சி காலனி பகுதி 4 வது வார்டில் மாரியம்மன் கோவில் தெருவில் இருபத்திஐந்துக்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளது.

இந்த குடியிருப்புகளை சுற்றிலும் வயல்கள் உள்ளது. இங்கு குடியிருக்கும் பொதுமக்கள் அனைவரும் தினக்கூலி வேலை செய்பவர்கள்.

இந்த தெருவில் 15 ஆண்டுகளுக்கு மேலாக சாலை வசதி இல்லாததால் சேற்றிலும் சகதியிலும் நடந்து செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. அவசர உதவிக்கு கூட இந்த தெருவில் வாகனங்கள் செல்ல முடியாத அவல நிலையில் மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் சாலை வசதி ஏற்படுத்தி தரக்கோரி திருவெண்ணைநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்திலும், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் பொதுமக்கள் சார்பில் மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போது மழைக்காலம் என்பதால் சாலையில் நடக்க முடியாதபடி மேலும் மோசமாகி, காலில் சேற்றுப்புண் ஏற்பட்டு மக்கள் அவதி அடைகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். சின்னசெவலை மக்களுக்கு விடியல் கிடைக்குமா?



கள்ளக்குறிச்சிதெற்குமாவட்டம்,ரிஷிவந்தியம்தொகுதி,ஒருங்கிணைந்ததிருக்கோவிலூர் மேற்கு ஒன்றிய திமுக செயலாளரும், முன்னாள் சோழவாண்டியபுரம் ஊராட்சி மன்ற தலைவருமான V.A.ஏகாம்பரம் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது புகைப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி நிர்வாகிகள் மரியாதை செய்தனர், திருக்கோவிலூர்யில் உள்ள உண்டு உறைவிடப் பள்ளியில் 200 மாணவ மாணவிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது, இதில் ஏகாம்பரம் மகன்கள் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் வினோத் ஏகாம்பரம் , அரசு ஒப்பந்ததாரர் V.A.E.விக்னேஷ் மற்றும் சோழவாண்டியப்புரம் கிளை கழக செயலாளர் சிவலிங்கம் மற்றும் கிளை நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

தினகனி



# பொன்னேரியில் பல்வேறு பகுதிகளில் வெளுத்து வாங்கும் கனமழை



பொன்னேரி: அக். 17

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது. இதையொட்டி சென்னை உள்பட 4 மாவட்டங்களுக்கு அதி கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டது. தமிழக அரசு சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு இருக்கிறது.

இந்நிலையில் பொன்னேரி மற்றும் பழவேற்காடு, மீஞ்சூர், சோழவரம், செங்குன்றம், புழல் உள்ளிட்ட பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது.

கனமழை பெய்து வருவதால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

# "பொதுமக்கள் தேவையின்றி வெளியே வர வேண்டாம்.." துணை முதலமைச்சர் உதயநிதி அறிவுறுத்தல்



சென்னை, அக். 17

கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக ரிப்பன் மாளிகையில் அதிகாரிகளுடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார்.

ஆய்வுக் கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய உதயநிதி ஸ்டாலின், "பொதுமக்கள் தேவையின்றி வெளியே வரவேண்டாம். சென்னையில் மழையால் விழுந்த அனைத்து மரங்களும் அகற்றப்பட்டுள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. மேம் பாலங்களில் கார் நிறுத்துவோருக்கு அபராதம் விதிக்கக்கூடாது என்று முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

300 இடங்களில் நிவாரண மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 14 மையங்களில் 600 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். நிவாரணமுகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவுகள் முறையாக தரப்படுகிறது.

10 மின்மாற்றிகளில் மட்டுமே மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. பிற இடங்களில் மின்சார விநியோகம் சீராக உள்ளது. 103 படகுகள் தயார்நிலையில் உள்ளன. 100 இடங்களில் மழைக்கால மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. 8 தேசிய பேரிடர் மீட்புப் படை குழுவினர் பணிகளை மேற்கொள்ள சென்னைக்கு வருகை தந்துள்ளனர்.

பருவ மழையை எதிர்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மீட்பு, நிவாரணப் பணிகளை மக்கள் பிரதிநிதிகள் மூலம் மேற்கொண்டு வருகின்றோம். ஏரிகளில் ஆகாய தாமரைகளை அகற்றும் பணிகளும் தொடர்ந்து நடந்து வருகிறது. சென்னையில் பல்வேறு இடங்களுக்கு சென்று நேரில் ஆய்வு செய்துள்ளோம்" என்று அவர் கூறினார்.

# ஆவடி ரெயில் நிலையத்தில் காத்துக் கிடக்கும் ஏராளமான பயணிகள்




சென்னை, அக். 17

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மிதமான மழை முதல் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. மழை விட்டுவிட்டு பெய்து வருவததால், சென்னையில் பெரும்பாலான இடங்களில் மழை நீர் தேங்கியுள்ளது.


இதற்கிடையில், சென்னை உள்பட 4 மாவட்டங்களுக்கு அதி கனமழைக்கான ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னையில் கனமழை காரணமாக சென்னை சென்ட்ரலில் இருந்து செல்லக்கூடிய பயணிகள் ரெயில் ரத்தாகி ஆவடியில் இருந்து புறப்படுகின்றன.

அதனை தொடர்ந்து, பயணிகள் சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் இருந்து ஆவடி ரெயில் நிலையத்திற்கு வந்தனர். தற்போது அங்கு ஆயிரக்கணக்கான பயணிகள் குவிந்துள்ளனர். குறிப்பாக, இரவு 9 மணிக்கு வர வேண்டிய ரெயிலானது 12 மணியை கடந்தும் வரவில்லை. இதனால் மழை மற்றும் குளிருக்கு நடுவே பயணிகள் மிகுந்த அவதியை சந்தித்து வருகின்றனர்.

இதுகுறித்து பயணிகளிடம் கேட்டபோது, "நாங்கள் மணிக்கணக்கில் காத்துக்கொண்டிருக்கிறோம். கேட்டால், ரெயில் வருவது குறித்து அறிவிப்பு செய்யப்படும் என்கிறார்கள். இதுவரை அறிவிப்பு செய்யப்படவில்லை. ரெயில் வருமா என்றே தெரியவில்லை. ஒருவேளை ரெயில்கள் ரத்து செய்யப்பட்டால் நள்ளிரவு நேரத்தில் நாங்கள் எப்படி வீட்டிற்கு செல்ல முடியும்? பெண்கள், குழந்தைகள் அவதியடைந்து வருகின்றனர். ரெயில்கள் குறித்த அறிவிப்பை தெளிவாக தெரிவிக்க வேண்டும்." என்றனர்.

# சென்னைக்கு அருகே கரையை கடக்கிறது காற்றழுத்த தாழ்வு மண்டலம் வானிலை ஆய்வு மையம்



சென்னை, அக். 17

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று இரவு மிதமான மழை முதல்கனமழைவெளுத்து வாங்கி வருகிறது. மழை விட்டுவிட்டு பெய்து வருவததால், சென்னையில் பெரும்பாலான இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளது. இதற்கிடையில், சென்னை உள்பட 4 மாவட்டங்களுக்கு அதி கனமழைக்கான ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழக அரசு சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது மழை நிலவரம், மீட்பு நிவாரண நடவடிக்கைகள் குறித்தும், செம்பரம்பாக்கம் உள்ளிட்ட நீர்நிலைகளில் நீர் இருப்பு விவரங்கள் குறித்தும் அதிகாரிகளிடம் முதலமைச்சர் கேட்டறிந்தார்.

மேலும் கட்டுப்பாட்டு மையத்திற்கு வரும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி காட்சி மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.

# கனமழை எதிரொலி: ஏற்காடு எக்ஸ்பிரஸ் உள்பட 4 ரெயில்கள் ரத்து



சென்னைம் அக். 17

இந்திய வானிலை ஆய்வு மைய எச்சரிக்கையின்படி சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நேற்று இரவு முதல் கன மழை பெய்து வருகிறது.

இதனால் சென்னையின் பல்வேறு பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் சுரங்கப்பாதைகளில் மழைநீர் தேங்கி உள்ளது.

இந்நிலையில், சென்னையில் கனமழை பெய்து வருவதாலும், பேசின்பிரிட்ஜ் வியாசர்பாடி ரெயில் நிலையம் இடையே தண்ணீர் தேங்கி நிற்பதாலும் சென்னை ஈரோடு ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரெயில் உள்பட 4 ரெயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என ரெயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது. திருப்பதியில் இருந்து சென்னை வரும் சப்தகிரி ரெயில் , சென்னையில் இருந்து திருப்பதி செல்லும் விரைவு ரெயில்

சென்னையில் இருந்து ஈரோடு செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ்

சென்னையில் இருந்து மைசூரு செல்லும் காவிரி எக்ஸ்பிரஸ் ஆகியவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

# 6 செ.மீ மழைக்கே பல இடங்களில் தண்ணீர் தேக்கம்: பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் குற்றச்சாட்டு



சென்னை, அக். 17

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறியுள்ளதாவது:

சென்னையில் இன்று காலை 8.00 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 6 செ.மீ. அளவுக்கு மட்டுமே மழை பொழிந்துள்ள நிலையில், அதையே சென்னை மாநகரத்தால் தாங்க முடியவில்லை.

சென்னை மாநகரின் பல பகுதிகளில் ஓரடி உயரத்திற்கும் கூடுதலாக மழை நீர் தேங்கி நிற்கிறது. பல இடங்களில்வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்திருக்கிறது.

சென்னையில் தமிழக அரசாலும், சென்னை மாநகராட்சியாலும் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் உள்ளிட்ட வெள்ளத் தடுப்புப் பணிகள் போதிய அளவுக்கு பயனளிக்கவில்லை என்பதையே 6 செ.மீ. மழையின் விளைவுகள் காட்டுகின்றன. அப்படியானால், 20 செ.மீ. மழை பெய்தால் சென்னை என்னவாகும் என்ற அச்சம் மேலும் அதிகரித்திருக்கிறது.

சென்னையில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகள் 90 சதவீதம் முடிவடைந்து விட்டன, 95 சதவீதம் முடிவடைந்து விட்டன என்று ஊடகங்களின் உதவியுடன் வீண் விளம்பரம் செய்து கொண்டிருந்தால் மட்டும் போதாது.

உண்மையான அக்கறையை களப்பணிகளில் காட்ட வேண்டும். அவ்வாறு காட்டியிருந்தால் 6 செ.மீ. மழைக்கு சென்னையின் பல இடங்களில் தண்ணீர் தேங்கும் நிலை ஏற்பட்டிருக்காது.

எத்தகைய இடர்ப்பாடுகள் வந்தாலும், எத்தகைய பேரிடர்கள் வந்தாலும் நம்மை ஆளும் அரசு நம்மைக் காக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு வர வேண்டும். சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ள மக்களுக்கு அரசின் மீது அந்த நம்பிக்கை இல்லை என்பதையே பொதுமக்கள் தங்களின் மகிழுந்துகளை வேளச்சேரி பாலத்திலும், பள்ளிக்கரணை பாலத்திலும் நிறுத்தி வைத்திருப்பது காட்டுகிறது.

மகிழுந்துகளை நிறுத்தி வைத்த மக்களில் ஒருவர் கூட தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளால் தங்கள் பகுதிகளில் மழை நீர் தேங்காது என்று கூறவில்லை. மாறாக, காவல்துறையினர் ஆயிரக்கணக்கில் அபராதம் விதித்தாலும் பரவாயில்லை; எங்கள் மகிழுந்துகளை பாலத்தில் தான் நிறுத்துவோம் என்று கூறியிருப்பதன் மூலம் அரசின் மீதான அவர்களின் அவநம்பிக்கை வெளிப்பட்டிருக்கிறது. பாலங்களின் மீது மகிழுந்துகளை நிறுத்துவது போக்குவரத்தின் வேகத்தைக் குறைக்கும் என்பதுதான் உண்மை. ஆனாலும், வேளச்சேரி, பள்ளிக்கரணை பாலங்களில் மகிழுந்துகள் நிறுத்தப்படுவதை எவரும் எதிர்க்கவில்லை. அதன் பொருள், தமிழக அரசு மற்றும் சென்னை மாநகராட்சியின் கையாலாகாத்தனத்தை மக்கள் புரிந்துகொண்டு விட்டனர் என்பதுதான். தொடக்கத்தில் மகிழுந்துகளை நிறுத்தும் மக்களை மிரட்டியும், அபராதம் விதித்தும் அவற்றை அப்புறப்படுத்தும்படி அச்சுறுத்திய சென்னை மாநகரக் காவல் துறை மக்களின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சி, இப்போது பாலங்களில் நிறுத்தப்படும் மகிழுந்துகளுக்கு நாங்கள் அபராதம் விதிக்கவில்லை என்று பல்டி அடித்துள்ளனர்.

எனவே, தமிழக அரசும், சென்னை மாநகராட்சியும் வீண்விளம்பரங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து எவ்வளவு மழை பெய்தாலும் சென்னையில் வெள்ள நீர் தேங்காது என்ற நிலையை உருவாக்கும் அளவுக்கு களப்பணிகளை செய்ய வேண்டும். இது நம்மைக் காக்கும் அரசு என்று எண்ணும் அளவுக்கு மக்களின் நம்பிக்கையை பெற வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# 42 இடங்களில் கனமழை பதிவாகி உள்ளது: சென்னை வானிலை ஆய்வு மையம்

சென்னை, அக்.17

வானிலை ஆய்வு மைய தென் மண்டல தலைவர் பாலச்சந்திரன் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தென்மேற்கு பருவ மழை முடிந்து வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கியுள்ளது.

42 இடங்களில் கன மழை பதிவாகியுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுப்பெறும்.

சென்னை மற்றும் புறநகரில் அடுத்த 2 நாட்கள் மிக கனமழை பெய்யும்.

அக்டோபர் 1 முதல் தற்போது வரை 12 செ.மீ. மழை பெய்துள்ளது.

சென்னையில் மாலை தொடங்கி இரவு வரை கன மழை பெய்ய வாய்ப்புள்ளது என தெரிவித்துள்ளார்.

# பாலக்கோடு அருகே அரசு பஸ் கவிழ்ந்து விபத்து 20 பேர் படுகாயம்

வெள்ளிச்சந்தை, அக். 17

பெங்களூருவில் இருந்து ஓசூர்வழியாக பயணிகளை ஏற்றி கொண்டு தருமபுரி நோக்கி நெடுஞ்சாலையில் அரசு பஸ் இன்று காலை வந்து கொண்டிருந்தது.

தற்போது சாரல் மழை பெய்து வரும் காரணத்தினால் சாலைகள் மிகவும் வலுவலுப்பாக உள்ளன.

பாலக்கோடு அடுத்த கோடியூர் அருகே வந்த போது முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோதாமல் இருக்க திடீரென டிரைவர் பிரேக் போட்டதால் கட்டுப்பாட்டை இழந்து அரசு பஸ் தலைகுப்புற சாலையில் கவிழ்ந்தது.

பேருந்தில் பயணம் செய்த பயணிகள் அலறினர். இதனை பார்த்த அந்த வழியாக வந்தவர்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். பஸ்சின் கண்ணாடிகளை உடைத்து கொண்டு வெளியே வந்தனர்.

இந்த விபத்து குறித்து பாலக்கோடு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

விபத்தில் படுகாயம் அடைந்த 20க்கும் மேற்பட்டவர்களை மீட்டு சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

இதில் படுகாயம் அடைந்தவர்களை மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு விபத்துக்குள்ளான அதே இடத்தில் தனியார் பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த வழுவழுப்பான சாலையை மாற்றக்கோரி பொதுமக்கள் சார்பில் பல்வேறு முறை கோரிக்கை விடுத்தும் நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் அலட்சியம் காட்டி வருவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

மேலும் இந்த விபத்து குறித்து பாலக்கோடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த விபத்து காரணமாக ஓசூர்பாலக்கோடு சாலையில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# கலை இலக்கிய போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசு விஜய் வசந்த் வழங்கினார்




கன்னியாகுமரி, அக். 17

கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

குமரி மேற்கு மாவட்ட மாணவர் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற மாணவர்களுக்கான கலை இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கினேன்.

நெய்யூர் இரண்டாம் நிலை பேரூராட்சி கண்ணோடு 1வது வார்டில் பாராளுமன்ற உறுப்பினர் நிதி 11.80 லட்சம் ரூபாயில் அமைக்கப்பட்ட புதிய அங்கன்வாடி கட்டிடத்தை திறந்து வைத்தேன்.

இதேபோல், கக்கோட்டுத்தலை ஊராட்சி செக்காரவிளை அருள்மிகு ஸ்ரீ வரப்பிரசாத விநாயகர் ஆலயம் அருகே பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சமுதாய நலக்கூடம் திறந்து வைத்தேன் என பதிவிட்டுள்ளார். இந்த நிகழ்ச்சிகளில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# உமர் அப்துல்லா பதவி ஏற்பு விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு





சென்னை, அக். 17

தமிழக அரசு சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை, ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் பரூக் அப்துல்லா தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு உமர் அப்துல்லாவின் பதவியேற்பு விழாவுக்கு அழைப்பு விடுத்தார்.

வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 'ரெட் அலர்ட்' விடுக்கப்பட்டு, முன்னெச்சரிக்கைப் பணிகளில் ஈடுபட்டுள்ளதால், அவ்விழாவில் நேரில் கலந்து கொள்ள இயலாது என்று அவரிடம் தெரிவித்த முதலமைச்சர் தி.மு.க. சார்பில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி எம்.பி., பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்வார் என்று தெரிவித்துள்ளார்.

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் மூன்று கட்டங்களாக நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குள் கடந்த 8ந்தேதி எண்ணப்பட்டன. இதில் ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாடு கட்சி காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றது. தேசிய மாநாடு கட்சியின் உமர் அப்துல்லா 2வது முறையாக அம்மாநில முதல்வராக பதவி ஏற்க இருக்கிறார்.

தேர்தல் முடிவு வெளியான நிலையில், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் அமல்படுத்தப்பட்டிருந்து ஜனாதிபதி ஆட்சி திரும்பப்பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சிவகிரி போலீசார் வாகன சோதனை: காரில் கடத்தி வந்த 69 கிலோ குட்கா பறிமுதல் 2 பேர் கைது

சிவகிரி, அக். 17

தென்காசி மாவட்டம் சிவகிரி பகுதி வழியாக ஒரு வாகனத்தில் குட்கா கடத்தி வருவதாக மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சீனிவாசனுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து அவரது உத்தரவின்பேரில், சிவகிரி அருகே தென்காசிமதுரை தேசிய நெடுஞ்சாலையில் தேவிபட்டணம் விலக்கு பகுதியில் தனிப்படை போலீசார் மற்றும் சிவகிரி போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சிவகிரி நோக்கி வேகமாக வந்த கார் ஒன்றை வழிமறித்து சோதனை செய்தனர். அப்போது காரில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் சுமார் 69 கிலோ இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக போலீசார் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் காரை பறிமுதல் செய்து போலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணை நடத்தினர்.

விசாரணையில் காரில் இருந்தவர்கள் சங்கரன் கோவில் பந்தப்புளி மேலத் தெருவை சேர்ந்த வெள்ளத்துரை (வயது 40) மற்றும் பந்தப்புளி வடக்கு தெருவை சேர்ந்த பிரபு (32) என்பதும், கர்நாடகா மாநிலம் பெங்களூரு பகுதியில் இருந்து தமிழக பகுதியில் விற்பனை செய்வதற்காக கொண்டு வந்த போது போலீசாரிடம் சிக்கியது தெரியவந்தது.

இதனையடுத்து 2 பேரையும் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆசிரியைக்கு பாலியல் தொல்லை தலைமை ஆசிரியரை கண்டித்து பள்ளி முற்றுகை

ஜோலார்பேட்டை, அக். 17

திருப்பத்தூர் மாவட்டம் விசாலப்பட்டு அடுத்த பெரிய மோட்டூர் ஊராட்சிக்கு உட்பட்ட பூனை குட்டி பள்ளம் பகுதியில் அரசு நடுநிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது.

இந்த பள்ளியில் தற்காலிக பணியாளராக 28 வயது ஆசிரியர் பணியாற்றி வருகிறார்.

இவரது கணவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு சாலை விபத்தில் பலியானதை தொடர்ந்து தற்போது அவர் தனது சகோதரர் வீட்டில் வசித்து வருகிறார். இந்த நிலையில் நேற்று அந்த பெண் ஆசிரியர்பள்ளிமுடிந்ததும் வீட்டுக்கு செல்ல தயாராகினார். அப்போது அங்கு சென்ற அந்த பள்ளியில் பணிபுரியும் தலைமை ஆசிரியர், பெண் ஆசிரியரிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டார். பின்னர் வீட்டுக்கு சென்ற பெண் ஆசிரியர், நடந்த விவரத்தை தனது சகோதரரிடம் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இன்று காலை 9 மணி அளவில் பள்ளி திறந்ததும், பெண் ஆசிரியரின் சகோதரர் மற்றும் உறவினர்கள் பள்ளியை முற்றுகையிட்டு, போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை முன்கூட்டியே அறிந்த பள்ளி தலைமை ஆசிரியர் தற்காலிக விடுப்பு எடுத்து பள்ளிக்கு வரவில்லை. இது குறித்து தகவல் அறிந்த ஜோலார்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் நாகராஜன், வட்டார உதவி தொடக்கக் கல்வி அலுவலர் அசோக்குமார், பெரிய மோட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் கமல் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் விரைந்து சென்று அவர்களிடம் சமரசம் பேசினர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# வடகிழக்கு பருவமழை தொடங்கியது: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

சென்னை, அக். 17

வடகிழக்கு பருவமழை அக்டோபர் இரண்டாவது வாரம் தொடங்கும் என ஏற்கனவே தகவல் வெளியானது.

இந்நிலையில், தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதாக என வானிலை ஆய்வு மையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், தென்மேற்கு பருவமழை முழுவதும் நிறைவுபெற்று, வடகிழக்கு பருவமழை தமிழ்நாடு, புதுச்சேரி பகுதிகளில் தொடங்கியுள்ளது. வடகிழக்கு பருவமழை மிகத் தீவிரமாக உள்ளது. தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மழை பெய்துள்ளது. தமிழ்நாட்டில் இன்றும் நாளையும் பெரும்பாலான இடங்களில்கனமழைக்குவாய்ப்பு உள்ளது. இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை இயல்பை விட அதிகமாக இருக்கும் என தெரிவித்துள்ளது.

# தாம்பரத்தில் முதுகலை மருத்துவர்கள் உண்ணாவிரதம்

சென்னை, அக். 17

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இளம் மருத்துவர் சங்கம் நாடு முழுவதும் இன்று உண்ணா விரதப் போராட்டத்தை நடத்தியது. தமிழகத்தில் அனைத்து அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் இந்திய மருத்துவ சங்கங்களில் இந்த போராட்டம் நடந்தது.

இந்த போராட்டத்திற்கு இந்திய மருத்துவ சங்கம் மற்றும் மருத்துவ மாணவர்கள் கூட்டமைப்பு ஆதரவு அளித்தது.

தாம்பரத்தில் உள்ள இந்திய மருத்துவ சங்க கட்டிடத்தில் முதுகலை மருத்துவர்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

இதற்கு ஐ.எம்.ஏ. தமிழ்நாடு மாநில தலைவர் அபுல்ஹசன் தலைமை தாங்கினார். நூற்றுக்கும் மேலான மருத்துவர்கள் உண்ணாவிரத போராட்டத் தில் கலந்து கொண்டனர்.

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழை வெள்ள மீட்பு உதவிக்கு தொலைபேசி எண் அறிவிப்பு



காஞ்சிபுரம், அக். 17

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்எச்சரிக்கை நடவடிக்கையாக வருவாய்த்துறை, காவல் துறை, உள்ளாட்சி துறை, நெடுஞ்சாலை, மின்சாரம் உள்ளிட்ட 11 துறையைச் சார்ந்த அலுவலர்களைக் கொண்டு 21 மண்டலக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

இந்த குழுவினர் பருவமழை காலங்களில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் தங்கி இருந்து மீட்பு பணிகளில் ஈடுபட உத்தரவிடப்பட்டுள்ளது. மண்டலக் குழுக்களின் குழு தலைவர்களின் பெயர் மற்றும் தொடர்பு எண்கள் விவரம் பின்வருமாறு...

காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதிகள் (வார்டு 125) நவிந்திரன் (ஆணையர்,காஞ்சிபுரம் மாநகராட்சி) 7397372823,

காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதிகள் (வார்டு 2651) ஆசிக்அலி(உதவி ஆட்சியர்) 9445000413,

சிறுகாவேரிபாக்கம் மற்றும் திருப்புக்குழி குறுவட்டம் வெற்றிவேல்(மாவட்ட ஆட்சியரின் நேர்முகஉதவியாளர்) 9080682288,

பரந்தூர், சிட்டியம்பாக்கம் மற்றும் கோவிந்தவாடி குறுவட்டம் ஜோதிசங்கர்(மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர்) 9443098567,

வாலாஜாபாத் பேரூராட்சி மற்றும் குறுவட்டம்தங்கவேலு (உதவி திட்ட அலுவலர்) 7402606009,

தென்னேரி குறுவட்டம் பாலமுருகன்(மாவட்ட ஆய்வு குழு அலுவலர்) 9444227190, மாகரல் குறுவட்டம் தனலட்சுமி(மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அலுவலர்) 7338801259,

உத்திரமேரூர் பேரூராட்சி மற்றும் குறுவட்டம்கந்தன்(திட்ட அலுவலர்) 9840989921,

திருப்புலிவனம், களியாம்பூண்டி குறு வட்டம் சத்தியதேவி(மண்டல மேலாளர்) 9150057181,

சாலவாக்கம் அரும்புலியூர் மற்றும் குண்ணவாக்கம் குறுவட்டம்பாக்கியலட்சுமி (தனித்துணை ஆட்சியர்) 8220438216,

ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி மற்றும் குறுவட்டம்ஜெகதிசன்(மாவட்ட ஆட்சியரின் நேர்முகஉதவியாளர்)7402606004,

மதுரமங்கலம், சுங்குவார்சத்திரம் குறுவட்டம்லதா(உதவி இயக்குநர்)8925809212,

வல்லம் மற்றும் தண்டலம் குறுவட்டம் பிச்சாண்டி(திட்ட அலுவலர், மகளிர் திட்டம்) 944094280

படப்பை குறுவட்டம்தண்டபாணி (உதவி இயக்குநர்,பஞ்சாயத்து)74026 06005,

படப்பை குறுவட்டம் வேதநாயகம் (மாவட்ட ஊராட்சி செயலர்) 7402606007,

செரப்பணஞ்சேரி குறுவட்டம், மணிமங்கலம் சுரேஷ்(நேர்முக உதவியாளர் (கணக்கு))9442745251,

கொளப்பாக்கம் குறுவட்டம் (மௌலிவாக்கம், கொளுத்துவாஞ்சேரி, கெருகம்பாக்கம், கொளப்பாக்கம், ஐயப்பந்தாங்கல், தெள்ளியகரம், பரணிப்புத்தூர், சின்னப்பணிச்சேரி, பெரியப்பணிச்சேரி, சீனிவாசபுரம்) .பாலாஜி (மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்) 9445000168,

திருமுடிவாக்கம் மற்றும் பூந்தண்டலம் பஞ்சாயத்து சக்திகாவியா(மாவட்டகுழந்தைகள்பாதுகாப்புஅலுவலர்) 6369131607,

மாங்காடு குறுவட்டம் (கொல்லச்சேரி, மலையம்பாக்கம், கொழுமுனிவாக்கம், தரப்பா க்கம், இரண்டாம்கட்டளை, தண்டலம், கோவூர் சிக்கராயபுரம், மூன்றாம் கட்டளை பகுதிகள்)உமாசங்கர் (உதவி திட்ட அலுவலர் (வீடுகள்)7402606006,

மாங்காடு நகராட்சி பகுதிகள் சரவணகண்ணன் (வருவாய் கோட்டாட்சியர்) 9444964899,

குன்றத்தூர்நகராட்சி சீனிவாசன்(மாவட்ட பிற்படுத்தபட்டோர்நலஅலுவலர்) 9445477826 மற்றும் பேரிடர் தொடர்பான விவரங்களுக்கு தொலைபேசி எண்கள் 04427237107, வாட்ஸ் அப்எண் 8056221077 தொடர்பு கொள்ளலாம்.

இதற்கிடையே பருவமழை முன்எச்சரிக்கை நடவடிக்கையாக பேரிடர்தொடர்பான பாதிப்புகள் மற்றும் தீர்வுகள் குறித்த ஆய்வு கூட்டம் கலெக்டர்கலைச்செல்வி தலைமையில் நடைபெற்றது.

இதில் காஞ்சிபுரம் மாவட்ட பொறுப்பு அமைச்சரான காந்தி கலந்து கொண்டு அனைத்து துறை சார்ந்த ஏற்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

அப்போது அமைச்சர் காந்தி கூறும்போது,

வரதராஜபுரம் பகுதியில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு அங்கு 24 மணி நேரமும் அலுவலர்கள் பணியில் இருப்பார்கள்.

மாவட்டத்தில் 276 ஜே.சி.பி.எந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன. 24 மணி நேர கட்டுப்பாட்டு அறைகளும் செயல்படும் என்றார்.

அப்போது செல்வம் எம்.பி.,எம்.எல்.ஏ.க்கள் சுந்தர்,எழிலரசன், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# எப்போதும் முன்கள வீரனாகத் துணை நிற்பேன் முதலமைச்சர் பேட்டி



சென்னை, அக். 17

சென்னையில் நேற்று இரவு முதல் இடைவிடாது பெய்து வரும் கனமழையிலும் சற்றும் ஓய்வில்லாமல் தொடர்ச்சியாக மழைநீரை அகற்றும் பணியில் மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ்தளபக்கத்தில்வெளியிட்டுள்ள பதிவில்,

கொட்டும் மழை உள்ளிட்ட இயற்கைப்பேரிடர்களை எதிர்கொள்ளத் தன்னலம் கருதாமல் நேரம் காலம் பார்க்காமல் நம் துயர்துடைக்கக் களம் காண்பவர்கள் தூய்மைப் பணியாளர்கள், மாநகராட்சி ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள்!

அவர்களுடன் நானும் எப்போதும் முன்கள வீரனாகத் துணை நிற்பேன் என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, புளியந்தோப்பு பகுதிக்கு சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்குள்ள கால்வாயை பார்வையிட்டார். அங்கு பணியாற்றி வந்த மாநகராட்சி ஊழியர்களிடம் விவரங்களை கேட்டறிந்தார். அங்கிருந்த தூய்மை பணியாளர்களிடமும் சகஜமாக பேசினார். அப்போது அங்குள்ள ஒரு டீக்கடைக்கு அவர்களை அழைத்து சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தூய்மை பணியாளர்களுக்கு பிஸ்கட், டீ வாங்கி கொடுத்தார். அந்த கடையில் அமர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் டீ குடித்தார்.

# விவசாயத்தை பாதிக்கும் எந்த தொழிற்சாலையும் கொண்டு வரக்கூடாது வேல்முருகன்



தஞ்சாவூர், அக். 17

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தை டெல்டா மாவட்டமாக அறிவிக்க வேண்டும். டெல்டா மாவட்டங்களைபாதுகாக்கப்பட்ட வேளாண்மண்டலமாக அறிவிக்க வேண்டும். டெல்டாவை பாலைவனமாக்கும் மீத்தேன், ஹைட்ரோ கார்பன் திட்டங்களை கொண்டு வரக்கூடாது.

ஓ.என்.ஜி.சி புதிய எண்ணெய் கிணறு தோண்ட கூடாது என்பதை வலியுறுத்தி கடந்த 2018 ஆம் ஆண்டு அம்மாபேட்டை பஸ் நிலையம் முன்பு தாளாண்மை உழவர் இயக்க தலைவர் திருநாவுக்கரசு தலைமையில் விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் திருமாவளவன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன், தமிழ் தேசிய பேரியக்கம் தலைவர் மணியரசன் உள்ளிட்ட பலர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து அம்மாபேட்டை போலீசார்திருநாவுக்கரசு, திருமாவளவன், வேல்முருகன் , மணியரசன் உள்ளிட்ட 21 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கு விசாரணை ஒருங்கிணைந்த தஞ்சாவூர் கோர்ட்டில் நடந்து வருகிறது.

இந்த நிலையில் இந்த வழக்கில் தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் இன்று தஞ்சாவூர் கோர்ட்டில் ஆஜரானார்.

வழக்கை விசாரித்த நீதிபதி அடுத்த மாதம் 15ந் தேதிக்கு விசாரணையை தள்ளி வைத்தார்.

வழக்கில் ஆஜராகி விட்டு வெளியே வந்த வேல்முருகன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

காவிரி டெல்டாவை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டும். ஓ.என்.ஜி.சி புதிய எண்ணெய்கிணறுகள்தோண்ட கூடாது என்பதை வலியுறுத்தி அம்மாபேட்டையில் சாலை மறியல் போராட்டம் நடத்தினோம். இதற்கு அப்போதைய அ.தி.மு.க அரசு எங்கள் மீது வழக்கு தொடுத்தது. அந்த வழக்கில் இன்று தஞ்சாவூர் கோர்ட்டில் ஆஜரானேன். இந்த வழக்கு தொடர்பாக ஏற்கனவே சென்னை உயர் நீதிமன்றத்தில் தடை வாங்கபட்டது. சம்மன் அனுப்பப்பட்டதால் நான் ஆஜர் ஆனேன்.

பல்வேறுகட்டபோராட்டங்களுக்குப்பிறகு காவிரி டெல்டா பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டது.

மக்கள் பிரச்சனைக்காக போராடியவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை திரும்ப பெற வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் 1000 க்கும் மேற்பட்ட வழக்குகளை திமுக அரசு திரும்ப பெற்றது.

வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்னர் பெய்த கனமழையில் 5 பேர் பலியாகி உள்ளனர். அவர்களின் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிவாரண தொகையை முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

கள்ளச்சாராய மரணத்தில் உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் அறிவிக்கப்பட்டது. ஆனால் மின்கம்பம் சீரமைக்கும் பணியில் எதிர்பாராத விதமாக உயிரிழந்தவருக்கு ரூ.5 லட்சம் வழங்கப்படுகிறது. மனித உயிர் விலை மதிக்க முடியாதது. நிவாரணம் என்பது ஒரே மாதிரியாக வகுக்கவேண்டும். குறைந்தது ரூ.25 லட்சம் நிவாரணம் அறிவித்து ஒரே மாதிரியாக வழங்க வேண்டும். இதில் பாகுபாடுக்கூடாது.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் துரித நடவடிக்கை எடுக்க 15க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். இதேபோல் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் ஐஏஎஸ் அதிகாரிகளை நியமித்து முதலமைச்சர் உத்தரவிட்டு உள்ளார். எனவே நியமிக்கப்பட்ட அனைவரும் துரிதமாக பணி செய்து இயற்கை பேரிடர்களில் இருந்து மக்களை காக்க வேண்டும்.

பருவ மழை, பேரிடர் கால நிவாரண நிதிகளை மத்திய அரசு ஒருபோதும் தமிழகத்திற்கு வழங்கியது இல்லை. ஜிஎஸ்டி வரி வசூலித்த தொகைகளை கூட வழங்கவில்லை. எனவே தமிழக அரசே உரிய நிதிகளை ஒதுக்கி வழங்க வேண்டும். பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் விவசாயம், நீர்வளத்தை பாதிக்கும் எந்த தொழிற்சாலையும் கொண்டு வரக்கூடாது. இலங்கையில் அமைந்துள்ள புதிய அரசால் தமிழ் ஈழ மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# பருவமழையைப் பாதிப்பின்றி எதிர்கொள்வோம் அண்ணாமலை



சென்னை, அக். 17

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால், சென்னை மட்டுமின்றி, தமிழகம் முழுவதுமே பல மாவட்டங்களிலும் மழைப்பொழிவு காணப்படுகிறது. மேலும், காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி ஏற்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதால், பல மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், பொதுமக்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும்.


குறிப்பாக, கடந்த ஆண்டுகளில், வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், முடிந்தவரையிலும், அடுத்த சில நாட்களுக்கு, பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்வது நன்று. தமிழக அரசு, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு, பாதுகாப்பான தங்குமிடம், உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

மேலும், சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் 90% அளவு நிறைவு பெற்றிருப்பதாக, அமைச்சர்களும், சென்னை மாநகராட்சி மேயர் அவர்களும் கடந்த மூன்று ஆண்டுகளாகக் கூறி வருவதால், கடந்த ஆண்டுகளை நினைவில் கொண்டு, தண்ணீர் தேங்கிக் கிடக்கும் சாலைகளில் செல்லும்போது, பொது மக்கள் மிகுந்த கவனத்துடன் செல்லுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

கனமழை இன்னும் சில நாட்களுக்குத் தொடர வாய்ப்பிருப்பதால், பொதுமக்கள், அவசியமற்ற பணிகளுக்காக வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும், மின்சாரம் தொடர்பான பொருள்களைக் கையாளும்போதும், நீர்நிலைகளிலும், மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நீர்நிலைகளில் இறங்க முற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அனைவரும் பாதுகாப்பாக இருப்போம். பருவமழையைப் பாதிப்பின்றி எதிர்கொள்வோம் என்று தெரிவித்துள்ளார்.

# பால் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க ஆவின் முன்னேற்பாடு




சென்னை, அக். 17

கடந்த ஆண்டு டிசம்பா் மாதம் வங்கக்கடலில் உருவான 'மிக்ஜாம்' புயல் காரணமாக சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை கொட்டித் தீா்த்தது. இதன் எதிரொலியாக சென்னையின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. இதனால், அத்தியாவசிய உணவுப் பொருளான பால் மற்றும் பால் பவுடா் பல இடங்களில் கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்பட்டு, பொதுமக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகினா். ரூ.40 மதிப்புடைய ஒரு லிட்டா் பால் அந்த நேரத்தில் சில இடங்களில் ரூ.200க்கும் அதிகமாக விற்பனையானது.

இதைத்தொடர்ந்து இந்த பருவமழை காலத்தில் இது போன்ற சிக்கல்களைத் தவிா்ப்பதற்காக ஆவின் நிறுவனம் அனைத்து வகையான முன்னேற்பாட்டுப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

இதுகுறித்து ஆவின் அதிகாரி ஒருவா் கூறியதாவது:

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ள நிலையில், கன்னியாகுமரி முதல் சென்னை வரை அனைத்து கடலோர மாவட்டங்களிலும் ஆவின் பால் மற்றும் பால் பவுடா் எந்த தடையுமின்றி விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில், கடலோர மாவட்டங்களில் உள்ள ஆவின் பால் விநியோக மையங்களில் மொத்தம் 20 ஆயிரம் கிலோ பால் பவுடா் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இதேபோல், 90 நாட்கள் கெடாமல் இருக்கும் பால் பாக்கெட்டுகள் மொத்தம் 50 ஆயிரம் லிட்டா் இருப்பில்வைக்கப்பட்டுள்ளன.

மேலும், மக்களுக்கு நேரடியாக பால் விநியோகம் செய்ய 250 வாகனங்களும் தயாா் நிலையில் உள்ளன. இதில் குறிப்பாக சென்னையில் பால், பால் பவுடா் ஆகியவை கூடுதலாக தேவைப்படும் பட்சத்தில், அம்பத்தூா் மற்றும் சோழிங்கநல்லூா் பால் பண்ணைகளில் இருந்து தடையின்றி விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் மூலம், அப்பகுதி மக்களின் தேவைகளை பூா்த்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றாா்.

## ஏரி, குளங்களுக்கு பொதுமக்கள் செல்ல வேண்டாம் கலெக்டர் எச்சரிக்கை

சென்னை, அக். 17

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று இரவு முதல் கனமழை கொட்டி வருகிறது. இதே போல செங்கல்பட்டு மாவட்டத்திலும் மழை வெளுத்து வாங்குகிறது. இதனால் ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் பொதுமக்கள் கனமழையின் போது ஏரி, குளங்களுக்கு செல்லவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இது தொடர்பாக செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அருண்ராஜ் வெளியிட்டு உள்ள அறிவிப்பில்,



பொதுமக்கள் யாரும் கனமழையின்போது ஆறு, குளங்கள், ஏரி போன்ற ஆழமான நீர்நிலைகள் உள்ள பகுதிக்கு செல்லவேண்டாம். மின் கம்பம் போன்றவற்றில் கால்நடைகளை கட்டி வைக்க வேண்டாம். அத்தியாவசிய தேவையின்றி வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டாம். மழை வெள்ள பாதிப்பு குறித்து பொதுமக்கள் கட்டணமில்லா தொலைபேசி எண் 1077, 044 27427412, 044 27427414, வாட்ஸ் அப்9444272345 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்து உள்ளார்.

## கன்னியாகுமரி திற்பரப்பு அருவியில் குளிக்க தடை

நாகர்கோவில், அக். 17

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாகசாரல்மழைபெய்து வருகிறது. இந்த நிலையில் வடகிழக்கு பருவ மழை கொட்டித் தீர்க்கும் என்றுசென்னைவானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.


இந்த நிலையில் வங்க கடலில் புயல் சின்னம் உருவாகி உள்ளதால் குமரி மாவட்டத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து மாவட்ட நிர்வாகம் சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட பொறுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு கலெக்டர் அலுவலகத்தில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் அதிகாரிகளுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் கலெக்டர் அழகு மீனாவும் குமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையின் போது செய்ய வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

அனைத்து துறை அதிகாரிகளும் பருவமழை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர நீர் நிலைகள் பகுதியில் பொதுமக்கள்செல்லவேண்டாம் என்றும் கலெக்டர் அறிவுறுத்திஉள்ளார். மழை நீடிக்கும் என்று வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதால் நீர்நிலைகளின் நீர்மட்டத்தை பொதுப்பணித்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள்.



ஏற்கனவே குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகள் முழு கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ளது. எனவே பேச்சிப்பாறை அணையில் இருந்து உபரி நீரை திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி நேற்றுமாலை பேச்சிப்பாறை அணையில் இருந்து 250 கன அடி உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளது. மதகுகள் வழியாக 551 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

அணையின் நீர்மட்டம் 43.75 அடியாக உள்ளது. அணைக்கு 566 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

பேச்சிப்பாறையிலிருந்து உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளதையடுத்து கோதையாறு, தாமிரபரணி ஆற்றின் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ளஅபாயஎச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இன்றும் தொடர்ந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

அணையின் நீர்மட்டத்தை அதிகாரிகள் 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறார்கள். அணைக்கு வரக்கூடிய நீர் வரத்து அதிகரிக்கும் பட்சத்தில்அணையில்இருந்து கூடுதல் தண்ணீரை வெளியேற்றும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதால் அருவியில் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சி நிர்வாகம் சார்பில் அதற்கான அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது.

பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 64.12 அடியாக உள்ளது. அணைக்கு 285 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 160 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

சிற்றாறு 1அணையின் நீர்மட்டம் 14.24 அடியாகவும், சிற்றாறு 2 அணைநீர்மட்டம் 14.58 அடியாகவும் உள்ளது. மாம்பழத்துறை அணை நீர்மட்டம் 50.11 அடியாகவும், முக்கடல் அணை நீர்மட்டம் 17.10 அடியாகவும், பொய்கைநீர்மட்டம் 14.80 அடியாகவும் உள்ளது.

மாவட்டம் முழுவதும் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாசன குளங்களும் நிரம்பி வழிகின்றன. குளங்களின் நீர்மட்டத்தையும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள். சில குளங்களின் கரைப்பகுதியை பலப்படுத்தவும்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மழை எச்சரிக்கை காரணமாக காளிகேசத்திற்கு சுற்றுலாப் பயணிகளுக்கும் அனுமதி இல்லை என்று வனத்துறை அறிவித்துள்ளது. மேலும் அந்த கோவிலில் உள்ள காளியம்மன் கோவிலுக்கு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## விமானம் மூலம் சேலம் சென்றார் கவர்னர் ஆர்.என்.ரவி

சேலம், அக். 17

சேலம் மாவட்டம் மேச்சேரியில் உள்ள சுமங்கலி திருமண மண்டபத்தில் அனைத்து இந்திய நெசவாளர்கள்நலச்சங்கம் சார்பில் சிறந்த நெசவாளர்களை கவுரவிக்கும் விழா இன்று மதியம் நடைபெறுகிறது.

இதில், தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறந்த நெசவாளர்களை கவுரவித்து பேசுகிறார். இதற்காக கவர்னர் ஆர். என்.ரவி சென்னையில் இருந்து விமானம் மூலம் சேலம் வந்தார்.



இதனை தொடர்ந்து வட பத்ரகாளியம்மன்கோவில் மற்றும் ராமலிங்க சவுடேஸ்வரி அம்மன் கோவிலுக்கு கவர்னர் ஆர்.என். ரவி சென்று சாமி தரிசனம் செய்கிறார்.

முன்னதாக மேச்சேரியில் தர்மபுரி மெயின் ரோட்டில் உள்ள ஸ்ரீ சவுடாம்பிகா தெருவில் கைத்தறி கூடத்தை பார்வையிடுகிறார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு சேலம் பெரியார் பல்கலைக் கழகம் வருகிறார். அங்கு அவர் இரவில் தங்குகிறார்.

தொடர்ந்து பெரியார் பல்கலைக்கழகத்தின் 23 வது பட்டமளிப்பு விழா நாளை (16ந் தேதி) காலை 10.30 மணி அளவில் பெரியார் பல்கலைக்கழக கூட்ட அரங்கில் நடக்கிறது.

இதில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி தலைமை தாங்கி மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்குகிறார். அவருடன் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் கலந்து கொள்கிறார்.

விழாவில் முனைவர் பட்ட ஆய்வு நிறைவு செய்துள்ள 288 மாணவர்களுக்கும், பெரியார் பல்கலைக் கழக துறைகள் மற்றும் இணைவு பெற்ற கல்லூரிகளில் அறிவியல் நிறைஞர், முதுகலை, இளங்கலை பாடங்களில் முதலிடம் பிடித்த 107 மாணவர்களுக்கும் தங்க பதக்கத்துடன் சான்றிதழை விழா மேடையில் கவர்னர் ஆர்.என்.ரவி வழங்குகிறார்.

2023, 2024ம் கல்வி ஆண்டில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகள் விழாவில் பட்டங்களை பெற உள்ளனர். பெரியார் பல்கலைக்கழக துறைகளில் முதுகலை பாடப்பிரிவில் முதலிடம் பிடித்த 32 மாணவர்களுக்கும், இளங்கலை பாடப் பிரிவில் 2 மாணவர்களுக்கும், இணைவு பெற்ற கல்லூரிகளில் முதுகலை பாடப்பிரிவில் 30 மாணவர்களுக்கும், இளங்கலை பாடப்பிரிவில் 43 மாணவர்களுக்கும் தங்கப் பதக்கத்துடன் சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது.

விழாவில் முதன்மை விருந்தினராக மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் ஸ்ரீராம் கலந்து கொண்டு பட்டமளிப்பு விழாஉரைநிகழ்த்துகிறார்.

சேலம், தர்மபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளைச் சேர்ந்த 46 ஆயிரத்து 365 மாணவர்களும், பெரியார் பல்கலைக்கழக துறைகளில் படித்த 1,018 மாணவர்களும், பெரியார் தொலைநிலை கல்வி நிறுவனங்களில் படித்த 1,077 மாணவர்களும் பட்டங்களை பெற உள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை துணைவேந்தர் ஆர். ஜெகநாதன், பதிவாளர் (பொறுப்பு) விஸ்வநாத மூர்த்தி, தேர்வாணையர் (பொறுப்பு) கதிரவன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மற்றும் விழா குழுவினர் செய்துள்ளனர். கவர்னர் வருகை யொட்டி பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளராக ஜான்தங்கம் நியமனம்: எடப்பாடி பழனிசாமி

சென்னை, அக். 17

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளராக பொறுப்பு வகித்த தளவாய் சுந்தரம் எம்.எல்.ஏ. அங்கு நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பு பேரணியை தொடங்கி வைத்தது சர்ச்சையானது.

இதையடுத்து அவரை மாவட்ட செயலாளர் பதவியில் இருந்து அ.தி.





மு.க. பொதுச் செயலாளர்எடப்பாடி பழனிசாமி நீக்கினார்.

இந்த நிலையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தின் தற்காலிக பொறுப்பாளராக கன்னியாகுமரிமேற்குமாவட்ட செயலாளர் ஜான்தங்கத்தை நியமித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர்எடப்பாடி பழனிசாமி அறிவித்து உள்ளார்.

## 'லக்கி பாஸ்கர்' படத்தின் 'கொல்லாதே' பாடல் வெளியானது

தமிழ், மலையாளம் மற்றும் தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நடிகர் துல்கர் சல்மான். இவர் மலையாள நடிகராக இருந்தாலும், இவரது திரைப்படங்களுக்கு தென்னிந்திய மொழிகளில் அதிக வரவேற்பு கிடைப்பது வழக்கமாகும். அவரது நடிப்பில் வெளியான சீதா ராமம் திரைப்படம் ஏகபோக வரவேற்பை பெற்றது. இதையடுத்து அவர் நடித்த கிங் ஆப் கோதா திரைப்படம் எதிர்பார்த்த வெற்றி அடையவில்லை. இதைத் தொடர்ந்து துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகி இருக்கும் புதிய திரைப்படம் தான் லக்கி பாஸ்கர்.

வெங்கி அட்லுரி இத்திரைப்படத்தை இயக்கி உள்ளார். இவர் தனுஷை வைத்து வாத்தி படம் இயக்கியவர் ஆவார். படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்தது. படத்தின் பின்னணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் படத்தை சித்தாரா என்டர்டெயின்மென்ட் நிறுவனமும் பார்ச்சூன் போர் சினிமாஸ் நிறுவனமும் இணைந்து தயாரிக்கிறது. இதில் துல்கர் சல்மான் உடன் இணைந்து மீனாட்சி சவுத்ரி நடிக்கிறார். ஜி.வி பிரகாஷ் இதற்கு இசை அமைக்கிறார்.

லக்கி பாஸ்கர் படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்களிடம் கவனம் பெற்றது. மேலும், இப்படம் வரும் 31 ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், லக்கி பாஸ்கர் படத்தின் 'கொல்லாதே' பாடல் வெளியாகியுள்ளது.

## நவீன் சந்திரா நடித்துள்ள 'லெவன்' படத்தின் ரிலீஸ் தேதி வெளியீடு




இயக்குனர் சுந்தர் சியிடம் 'கலகலப்பு 2', 'வந்தா ராஜாவாதான் வருவேன்', 'ஆக்சன்' உள்ளிட்ட படங்களில் இணை இயக்குநராகப் பணியாற்றியவர் லோகேஷ் அஜ்ல்ஸ்.

'சில நேரங்களில் சில மனிதர்கள்' மற்றும் 'செம்பி' ஆகிய பெரிதும் பாராட்டப்பட்ட வெற்றி படங்களை தொடர்ந்து விறுவிறுப்பான புலனாய்வு திரில்லரான 'லெவன்' திரைப்படத்தை தங்களது மூன்றாவது படைப்பாக ஏ ஆர் என்டர்டைன்மென்ட் நிறுவனத்தின் சார்பில் அஜ்மல் கான் மற்றும் ரியா ஹரி தயாரிக்கின்றனர்.

அறிமுக இயக்குநர் லோகேஷ் அஜில்ஸ் இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'லெவன்' எனும் திரைப்படத்தில் நவீன் சந்திர, ரியா ஹரி, ஷசாங்க், ரவி வர்மா, கீர்த்தி தாம ராஜு, அபிராமி, 'ஆடுகளம்' நரேன், திலீபன், ரித்விகா, அர்ஜய் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். டி.இமான் இசையில் இயக்குநர் லோகேஷ் அஜில்ஸ் எழுதியுள்ள 'தி டெவில் இஸ் வெயிட்டிங்' பாடலை, நடிகை சுருதிஹாசன் பாடியுள்ளார். நடிகர் கமல்ஹாசன் இந்த பாடலுக்கான லிரிக்கல் வீடியோவை தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இந்த முதல் பாடலைப் பற்றி இயக்குனர் கூறுகையில், "தி டெவில் இஸ் வெயிட்டிங் ஆங்கிலத்தில் உயர்தரத்துடன் உருவாக்கப்பட்ட ஒரு ஆற்றல்மிக்க பாடல். டி. இம்மானின் இசையும், சுருதிஹாசனின் குரலும் இந்த பாடலுக்கு முக்கிய பலம்" என்றார் .

இந்நிலையில், லோகேஷ் அஜில்ஸ் இயக்கத்தில் உருவாகியுள்ள 'லெவன்' படத்தின் ரிலீஸ் தேதியை படக்குழு வெளியிட்டுள்ளது. படம் வரும் நவம்பர் 15ம் தேதி வெளியாகிறது

## பாலியல் வழக்கு: சிறப்பு விசாரணைக் குழுவிடம் பதிலளித்த மலையாள நடிகர் ஜெயசூர்யா!

ஹேமாகமிஷன்அறிக்கையால்மலையாளபடஉலகில்நடந்தபாலியல் அத்துமீறல்கள் வெளிச்சத்துக்கு வந்து நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது.இதனை தொடர்ந்து நடிகர்கள், இயக்குனர்கள், தயாரிப்பாளர்களுக்கு எதிராகபாலியல்புகார்கள்அடுத்தடுத்து வெளியாகி வருகின்றன. இது மலையாள திரையுலகில் பல்வேறு அதிரடி திருப்பங்களையும், அதிர்வலைகளையும் ஏற்படுத்தி உள்ளது.



இதில் மலையாள நடிகர் ஜெயசூர்யாவும் சிக்கியுள்ளார். ஒரு நடிகை, நடிகர் ஜெயசூர்யா மீது பாலியல் புகார் தெரிவித்திருக்கிறார். நடிகை மினு முனீர், சோனியா மல்ஹார் ஆகியோர் நடிகர் ஜெயசூர்யா, தங்களுக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் அளித்தார்கள். இது, ஜெயசூர்யா ரசிகர்களிடையே பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. இந்த புகாரின் பேரில் அவர் மீது 2வது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜாமீனில் வெளிவர முடியாத பிரிவில் வழக்குப் பதியப்பட்டுள்ளதால், நடிகர் ஜெயசூர்யாவுக்கு பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சிறப்பு விசாரணைக் குழுவின் முன்பு ஆஜராகி தன் மீதான பாலியல் குற்றவழக்கு குறித்த கேள்விகளுக்கு பதிலளித்தார் நடிகர் ஜெயசூர்யா. இன்று திருவனந்தபுரத்தில் உள்ள கன்டோன்மென்ட் காவல் நிலையத்தில் இந்த விசாரணை நடைபெற்றது. .

இந்த விசாரணையில் நடிகர் ஜெயசூர்யா காவல் துறையினரிடம் "என் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் நான் மறுக்கிறேன். என் மீதான பாலியல் புகார் முற்றிலும் புனையப்பட்டது. எனக்கு முன்ஜாமீன் கூட தேவையில்லை. என் மீதான குற்றச்சாட்டுகள் பொய் என்று நிரூபிக்கும் வரை நான் தொடர்ந்து சட்ட ரீதியாக போராடுவேன். நான் வாழும் தியாகி என்பதை நம்புகிறேன். யார் மீது வேண்டுமானாலும் பொய் வழக்கு போடலாம் என்பது ஆபத்தானது. குறைந்தபட்சம் என் வழக்கை எதிர்கொள்ள எனக்கு ஒரு தளம் உள்ளது. பலருக்கு அப்படி எதுவும் இல்லை. இப்படியான பொய் வழக்குகள் பலரது குடும்பத்தையும் சீர்குலைத்து விடுகிறது" என விளக்கம் அளித்துள்ளார்.

## வங்காளதேச தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து சந்திக ஹதுருசிங்க இடைநீக்கம்




வங்காளதேச கிரிக்கெட் அணி சமீபத்தில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடியது. இந்த இரு தொடர்களையும் (20, 30) இந்திய அணி முழுமையாக கைப்பற்றி அசத்தியது.

இந்ததொடர்தொடங்குவதற்குமுன்னர்இந்தியஅணியை வீழ்த்துவோம் என வங்காளதேச அணியினர் கூறி வந்தனர். ஆனால், அதற்கு மாறாக ஒரு போட்டியில் கூட வெற்றி பெறாமல் வங்காளதேச அணியினர் சொந்த நாட்டுக்கு திரும்பினர்.

இந்நிலையில், வங்காளதேச அணியின் தலைமை பயிற்சியாளராக செயல்பட்டு வந்த சந்திக ஹதுருசிங்க இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்தியாவுக்கு எதிரான மோசமான செயல்பாடு காரணமாகவும், கடந்த 2023 ஒருநாள் உலகக்கோப்பை தொடரின் போது ஒரு வீரரை அறைந்த காரணத்திற்காகவும் சந்திக ஹதுருசிங்க இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அவருக்கு பதிலாக வெஸ்ட் இண்டீசை சேர்ந்த முன்னாள் வீரர் பில் சிம்மன்ஸ் வங்காளதேச அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக செயல்பட உள்ளதாகவும், அவர் சாம்பியன்ஸ் டிராபி தொடர் வரை தலைமை பயிற்சியாளராக செயல்படுவார் எனவும் கூறப்படுகிறது.

## டென்மார்க் ஓபன் பேட்மிண்டன்; முதல் சுற்றிலேயே தோல்வி கண்ட லக்சயா சென்



டென்மார்க்ஓபன்சர்வதேசபேட்மிண்டன்போட்டி அங்குள்ள ஒடென்ஸ் நகரில் நடந்து வருகிறது. இந்த தொடரில் இன்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் (ரவுண்ட் ஆப் 32) ஒன்றில் இந்தியாவின் லக்சயா சென், சீனாவின் லூ குயாங் சூவை சந்தித்தார். இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 21-12 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றிய லக்சயா சென், ஆட்டத்தின் அடுத்த இரு செட்களை 19-21, 14-21 என்ற புள்ளிக்கணக்கில் இழந்தார். இதன் மூலம் லூ குயாங் சூ 12-21, 21-19, 21-14 என்ற புள்ளிக்கணக்கில் லக்சயா சென்னை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். முதல்சுற்றிலேயே தோல்வி கண்ட லக்சயா சென் தொடரில் இருந்து வெளியேறினார்.

## விராட் கோலி உலகத் தரம் வாய்ந்த வீரர் என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன் கவுதம் கம்பீர்

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் நாளை தொடங்குகிறது. இந்த தொடரின் ஆட்டங்கள் பெங்களூரு, புனே, மும்பை ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது. இந்த தொடர் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடர் என்பதால் இரு அணிகளுக்கும் இந்த தொடர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இந்த தொடருக்கான இந்திய அணி ரோகித் சர்மா தலைமையிலும், நியூசிலாந்து அணி டாம் லதாம் தலைமையிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் விராட் கோலியின் பார்ம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்து கம்பீர் கூறியதாவது, விராட் கோலி உலகத் தரம் வாய்ந்த வீரர் என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன். அவர் நீண்டகாலமாக சிறப்பாக விளையாடி வருகிறார். 2008ம் ஆண்டில் இலங்கைக்கு எதிரான ஒரு நாள் போட்டியின் மூலம் அவர் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகம் ஆன போது என்னுடன் இணைந்து தொடக்க வீரராக இறங்கியது நினைவில் இருக்கிறது. அப்போதில் இருந்து இப்போது வரைக்கும் சாதிக்கும் வேட்கையுடன் காணப்படுகிறார்.

இந்த வேட்கை தான் அவரை உலகத்தரம் வாய்ந்த வீரராக உருவாக்கி இருக்கிறது. நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நிறைய ரன் குவித்து, அந்த உத்வேகத்துடன் ஆஸ்திரேலியாவுக்கு செல்லும் ஆவலில் அவர் இருப்பார். நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடுவதை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளார். ஒவ்வொரு ஆட்டத்தையும் வைத்து வீரரின்திறமையைமதிப்பிடக்கூடாது.அதுநியாயமானதாக இருக்காது. இது ஒரு விளையாட்டு.

ஏற்றத் தாழ்வு இருக்கத் தான் செய்யும். நாங்கள் தொடர்ச்சியாக 8 டெஸ்டில் விளையாட உள்ளோம். கோலி மட்டுமல்ல, ஒவ்வொருவரும் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புடன் இருப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.